செய்தி வெளியீடு எண்: 70/2018 நாள்: 06.02.2018

## இந்தியன் வங்கி சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் இலவச பயிற்சியை பெற ஓர் அரிய வாய்ப்பு!

### மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு!

வேலூர் மாவட்டத்தில் இந்தியன் வங்கி சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் "Travel and Tourist Guide" பயிற்சியை 10 நாட்கள் இலவசமாக நடத்தவுள்ளது. இப்பயிற்சியினை பெற குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும், 18 வயது முதல் 45 வயது வரையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். இந்த இலவச பயிற்சி 10 நாட்கள் நடைபெறும். பயிற்சி நேரம் காலை 9.00 மணி முதல் மாலை 5.300 மணி வரை ஆகும். இப்பயிற்சியின் போது தேநீர் மற்றும் உணவு இலவசம். முழுமையான பயிற்சிக்கு பின் சான்றிதழ்கள் வழங்கப்படும். "Tourism Guide" ஆக விருப்பம் உள்ளவர்கள்

**"இயக்குநர்,**
**இந்தியன் வங்கி சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம்,**
**எண்: 25, 2 ஆம் தளம், முதல் கிழக்கு நெடுஞ்சாலை,**
**காந்திநகர் (ஓடை பிள்ளையார் கோவில் அருகில்),**
**காட்பாடி,**
**வேலூர் - 632 006."**

என்ற முகவரியில் அணுகி வேலூர் மாவட்ட இளைஞர்கள் பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
வேலூர்-9.